# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066957

1. District மாவட்டம் : Thiruvarur PS: காவல்நிலையம் V&AC Year ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 03/2020 Date: நாள் 23-10-2020

2. (i) Act சட்டம்: U/s. 109(1) crpc & Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 7, 7A, 8, 12 of PC Act Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 1988 as amended 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் D/o. Date to : நாள் வரை 22/10/2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 15.30 hrs to 2300 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் FIR - D/R Time : நேரம் 23/10/2020 0130 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 20 km North
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Sub Registrar office Nannilam
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. D. Kamala Kannan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. Periasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35/2020 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி Senior Revenue Inspector Thiruvarur Circle.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(A1) Tr. P. Kannan 53/2020 S/o. Pakiri, Sub registrar, Nannilam
(A2) Tr. S. Murali 45/2020 S/o. Aathivinayahar Veedhi, Koothanur.
(A3) Tr. K. Natarajan 76/2020 S/o. Kanthasamy, south street, Virgudi
(A4) Tr. S. Prabaharan 40/2020 S/o. sellaiyan, Keela theru Nagapallinam Nallamangudi, Nannilam Tk Thiruvarur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant : குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது:

இன்று 23.10.2020-ந்தேதி 0130 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.இராதமிழ்ச்செல்வி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது பெ. கமலகண்ணன், த/பெ. பெரியசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு :- அனுப்புநர்: பெ. கமலகண்ணன், த/பெ. பெரியசாமி முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, இன்று 22.10.2020 ஆம் தேதி திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு மேற்கொள்வதற்கு புரோக்கர்கள் முரளி, நடராஜன், பிரபாகரன் ஆகியோர் மூலமாக சார்-பதிவாளர் கையூட்டு வாங்குவதாக கிடைத்த தகவல் தொடர்பாக தஞ்சாவூர் ஆய்வு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 23.10.20

Signature of the Officer in-charge, Police Station [signature] 23.10.2020.
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(R. TAMILSELVI)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Inspector of police
Rank: நிலை ....................No எண் ........
VSAC, Thiruvarur

* GCP-2404-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

குழும அலுவலர் திரு. சுப்பையா அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் பெ. கமலகண்ணன், த/பெ பெரியசாமி,முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர் ஆகிய நான் மற்றும் திரு.ராஜசேகர் த/பெ. முருகேசன், கிராம நிர்வாக அலுவலர், 42-விஜயபுரம், திருவாரூர் தாலுக்கா ஆகியோர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன், 18.30 மணி முதல் 23.00 மணி வரை திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது மேற்படி நன்னிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் சொன்னதன் பேரில் பத்திரப்பதிவு மேற்கொள்ள வந்தவர்களிடம் வசூல் செய்து சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காக கையூட்டு தொகை ரூ.80,000/- திரு. முரளி என்பவரிடமிருந்தும், ரூ.5,700 திரு. நடராஜன் என்பவரிடமிருந்தும், ரூ.19,200/- திரு. பிரபாகரன் என்பவரிடமிருந்தும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்கள் மீது வழக்கு பதிவு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd (பெ. கமலகண்ணன்) 23.10.2020 முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர். திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் விபரம் : இன்று 22.10.2020-ஆம் தேதி திருவாரூர் மாவட்டம் நன்னிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு மேற்கொள்வதற்கு புரோக்கர்கள் முரளி, நடராஜன், பிரபாகரன் ஆகியோர் மூலமாக சார்பதிவாளர் கையூட்டு வாங்குவதாக கிடைத்த தகவலை தஞ்சாவூர் ஆய்வுக்குழு அலுவலர் அவர்களுக்கு 15.45 மணியளவில் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் தஞ்சாவூர் ஆய்வு குழும அலுவலர் திரு.சுப்பையா, அவர்களால் மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்ட திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் 17.00 மணி அளவில் ஆஜரான 1) திரு.கமலக்கண்ணன், த/பெ பெரியசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர், 2) திரு.ராஜசேகர், த/பெ முருகேசன், கிராம நிர்வாக அலுவலர், 42-விஜயபுரம், திருவாரூர் தாலுக்கா ஆகியோருடன் இரா.தமிழ்ச்செல்வி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர் மற்றும் குழுவினருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 17.30 மணிக்கு புறப்பட்டு 18.30 மணியளவில்

நன்னிலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தும் திடீர் சோதனை மேற்கொண்டதற்கான நடவடிக்கை விவரம். இந்த திடீர் சோதனை மேற்கொண்ட குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம்: 1) திரு.கமலக்கண்ணன், த/பெ பெரியசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர், 2) திரு.ராஜசேகர், த/பெ முருகேசன், கிராம நிர்வாக அலுவலர், 42-விஜயபுரம், திருவாரூர் தாலுக்கா 3) இரா.தமிழ்ச்செல்வி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். மேற்படி திடீர் சோதனையின் போது திருவாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தவர்கள் விவரம். 1) திரு.ப.கண்ணன், த/பெ பக்கிரி, சார்பதிவாளர், சார்பதிவகம், நன்னிலம். 2) திரு.முரளி, த/பெ சம்மந்தம், ஆதிவிநாயகர் வீதி, கூத்தனூர். (தனிநபர் - உரிமையாளர் SMR கம்பியூட்டர் சென்டர், நன்னிலம்) 3) திரு.நடராஜன், த/பெ கந்தசாமி, தெற்குவீதி, விற்குடி, பதிவு பெற்ற ஆவண எழுத்தர் எண் 710/84. 4) திரு. பிரபாகரன், த/பெ செல்லையன், கீழத்தெரு, நல்லமாங்குடி, நன்னிலம்.(தனிநபர் - உரிமையாளர் பிரபா கம்பியூட்டர் சென்டர், லையன்கரை தெரு, நன்னிலம்) மேற்படி அலுவலகத்திற்கு திடீர் சோதனைக்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்த போது மேற்படி அலுவலகத்தின் அனைத்து லைட்டுகளையும் ஆப் செய்துவிட்டு, வாரன்டாவில் இருட்டில் நின்றவர்கள் சோதனை குழுவினரை கண்டவுடன் ஒட முயற்சித்தார்கள். அவர்களை தடுத்து விசாரித்த போது மேற்படி சார்பதிவகத்தின் சார்பதிவாளர் திரு.கண்ணன் மற்றும் புரோக்கர்கள் திரு.முரளி, பிரபாகரன் மற்றும் ஆவண எழுத்தர் திரு.நடராஜன் ஆகியோர் என்று விபரம் தெரியவந்தது. திடீர் சோதனை குழுவினை அறிமுகப்படுத்திக் கொண்டும் திடீர் சோதனை செய்ய வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேற்படி சார்பதிவகத்தினுல் மேற்படி நபர்களுடன் உள்ளே வந்து சோதனை ஆரம்பிக்கப்பட்டது. சார்பதிவாளர் திரு.கண்ணன் அவர்களை விசாரித்தபோது இன்று 22.10.2020 ஆம் தேதி மொத்தம் 14 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் அதில் கிரய பத்திரங்கள் 9, செட்டில்மெட் பத்திரம் 2, டெப்பாசிட் ஆப் டைட்டில் 2, Others-1 (விற்பனைச் சான்று) என அதன் விவரங்களை தெரிவித்தார். மேற்படி சார்பதிவாளரிடம் அலுவலக தனிநபர் பணபதிவேடு குறித்து கேட்ட போது அந்த ஆவணத்தை எடுத்து சார்பதிவாளர்

ஆஜர் படுத்தினார். அதில் இன்று 22.10.2020 தேதியில் சார்பதிவாளர் திரு.கண்ணன், இளநிலை உதவியாளர் வினோத்குமார், DEO மைதிலி, IPCO ஈஸ்வரி ஆகியோர் மட்டும் அவர்களது கையிருப்பு தொகை குறித்து பதிவு செய்திருந்தார்கள். மேலும் மற்ற அலுவலர்கள் பணி முடித்து அலுவலகத்திலிருந்து மாலை 06.30 மணிக்கு கிளம்பி விட்டதாக தெரிவித்தார். மேற்படி சார்பதிவாளரிடம் அவரிடம் இருந்த பணம் ரூ.110/-குறித்து கேட்டப்போது அவர் இன்று 22.10.2020 தனது சொந்த செலவிற்காக எடுத்த வந்த ரூ.600/-ல் செலவு போக மீதம் ரூ.110/- என்று தெரிவித்தார். அவரது டேபிளில் இருந்த நீலக்கலர் பிளாஸ்டிக் டப்பாவில் ரூ.40,200/- இருந்ததை ஆஜர்படுத்தினார். இந்த பணம் குறித்து விசாரித்த போது இந்தப் பணம் 2020 ஆம் வருடத்தில் இதுவரை கொடிநாள் நிதிக்காக வசூல் செய்த தொகை என்றும், அதற்கான பில் புத்தகங்களை காண்பித்ததை பார்வையிட்டதில் சரியாக இருந்ததால் இந்தப்பணம் திரும்ப சார்பதிதவாளரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் நிரந்தர பண வைப்பு தொகை உள்ளதா என்று கேட்கப்பட்டதற்கு, நிரந்தா வைப்பு தொகையில் தற்போது ரூ.250/- உள்ளது என்றும், அதற்கான பதிவேட்டையும் காண்பித்தார், அவற்றை பார்வையிட்டதில் சரியாக இருந்ததால், அந்தப்பணத்தை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. சார்பதிவாளருடன் இருந்த புரோக்கர்கள் திரு.முரளி, பிரபாகரன் மற்றும் நடராஜன் ஆகியோரை விசாரிக்கப்பட்டது. திரு.முரளி தன்னுடைய தந்தையார் பெயர் சம்மந்தம் என்றும், கூத்தனூர் ஆதிவிநாயகர் நகரில் வசிப்பதாகவும், நன்னிலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கிழக்கே செல்வம் என்வருக்கு சொந்தமான இரண்டு அடுக்கு மாடிக்கட்டிடத்தில் கீழ் தளத்தில் SMR கம்பியூட்டர் என்ற பெயரில் கடை வைத்துள்ளதாகவும், கம்பியூட்டரில் டாக்குமென்ட் அடிக்கும் வேலை செய்வதாகவும், தனது கடையில் தான் எப்போதும் ஆவண எழுத்தர் நடராஜன் அவரது வேலைகளை செய்வார் என்றும் கூறினார். இவரை சோதனையிட்ட போது இவரிடம் ரூ.80,000/- பணம் இருந்தது. இது குறித்து விசாரித்த போது இன்று மற்றும் கடந்த இரண்டு நாட்களில் பத்திரப்பதிவு மேற்கொண்டவர்களிடம் ஆன்லைன் தொகை செலுத்த பணம் வாங்கிய போது சார்பதிவாளருக்கு கொடுக்க பணம் சேர்த்து வசூல் செய்து வைத்திருந்தது என்றும், இன்று 22.10.2020 ஆம் தேதி சார்பதிவாளரிடம் கொடுப்பதற்காக அலுவலகத்தின் வாசலில் நின்ற போது சோதனை குழுவினர் வந்துவிட்டதால் ஒட

முயற்சித்ததாகவும் தெரிவித்தார். இதனால் மேற்படி ரூ.80,000/- கையூட்டாக வசூல் செய்து சார்பதிவாளருக்கு புரோக்கர் முரளியால் கொடுக்க வைத்திருந்த பணம் என்று தெரிய வந்ததால் இந்த பணம் ரூ.80,000/- கைப்பட்டப்பட்டது. மேலும் திரு.S.பிரபாகரன் என்பவரை விசாரிக்க இவர் தன்னுடைய தந்தையார் பெயர் செல்லையன் என்றும், நல்லமாங்குடி, கீழத்தெருவில் வசிப்பதாகவும், தான் நன்னிலம் பாலத்திற்கு அருகில், லையன் கரை தெருவில் அச்சுதமங்கலத்தை சேர்ந்த கேசவன் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் பிரபா கம்பியூட்டர் சென்டர் என்ற பெயரில் கடை வைத்து நடத்தி வருவதாகவும், இவரது கடையில் கம்பியூட்டரில் ஆவண வரைவுகள் தயார் செய்வதாகவும், ஆவணங்கள் தயார் செய்ய ஆவண எழுத்தர் சுப்பிரமணியன் என்பவரை வைத்துள்ளதாகவும், இவரது கடையில் தயார் செய்யப்படும் ஆவணங்களை பதிவு மேற்கொள்வதற்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருவது வழக்கம் என்றும், பத்திரப்பதிவு செய்ய வருபவர்களிடம் ஆன்லைன் தொகை செலுத்த பணம் வாங்கியபோது அதனுடன் சேர்த்து ரூ.1,000/- முதல் ரூ.3,000/- வரை வசூல் செய்து சார்பதிவாளருக்கு கொடுப்பது வழக்கம் என்றும் அவ்வாறு வசூல் செய்த பணம் ரூ.19,200/- தொகையை இன்று 22.10.2020 ஆம் தேதி மாலை 6.30 மணி அளவில் சார்பதிவாருக்கு கொடுக்க நின்று கொண்டிருந்த போது சோதனை குழுவினர் வந்து விட்டதால் ஒட முயற்சித்ததாகவும் தெரிவித்து ரூ.19,200/- தொகையை ஆஜர் படுத்தினார். இதனால் மேற்படி ரூ.19,200/- தொகை கையூட்டாக வசூல் செய்து சார்பதிவாளருக்கு புரோக்கர் பிரபாகரனால் கொடுக்க வைத்திருந்த பணம் என்று தெரிய வந்ததால் இந்த பணம் ரூ.19,200/- கைப்பற்றப்பட்டது. மேலும் ஆவண எழுத்தர் திரு.நடராஜன் என்பவரை விசாரிக்க தனது தந்தையின் பெயர் கந்தசாமி என்றும், விற்குடி, தெற்கு தெருவில் வசிப்பதாகவும், தான் ஆவண எழுத்தராக உள்ளதாவும், தனது பதிவு எண் A/710/84 MDI என்றும், சார்பதிவாளர் அலுவகத்திற்கு அருகில் உள்ள SMR கம்பியூட்டர் கடையில் அமர்ந்துதான் தினந்தோறும் ஆவண வரைவு மேற்கொள்வதாகவும் கூறினார். அவரை சோதனையிட்டபோது இவரிடம் ரூ. 5,700/- இருந்தது. இது குறித்து விசாரிக்க இந்தப்பணம் குறித்து எந்த விபரமும் இவர் கூற மறுத்ததால் இந்த பணம் ரூ.5,700/- ஐ சார்பதிவாளருக்கு கொடுக்க வைத்திருந்த

கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணத்தின் விபரம்

| வ. எண் | யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது | மொத்தத் தொகை | ரூபாய் நோட்டுகள் விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு.முரளி, த/பெ சம்மந்தம், ஆதிவிநாயகர் வீதி, கூத்தனூர். (தனிநபர் - உரிமையாளர் SMR கம்பியூட்டர் சென்டர், நன்னிலம்) | ரூ.80,000/- | ரூ.2000 x 27 = ரூ. 54,000/-, ரூ.500 x 45 = ரூ. 22,500/-, ரூ.200 x 4 = ரூ.800/-, ரூ.100 x26 = ரூ. 2,600/-. |
| 2 | திரு.நடராஜன், த/பெ கந்தசாமி, தெற்குவீதி, விற்குடி, பதிவு பெற்ற ஆவண எழுத்தர் எண் 710/84. | ரூ.5,700/- | ரூ.500 x 9 = ரூ. 4,500/-, ரூ.200 x 2 = ரூ.400/-, ரூ.100 x8 = ரூ. 800/-. |
| 3 | திரு. பிரபாகரன், த/பெ செல்லையன், கீழத்தெரு, நல்லமாங்குடி, நன்னிலம்.(தனிநபர் - உரிமையாளர் பிரபா கம்பியூட்டர் சென்டர், லையன்கரை தெரு, நன்னிலம்) | ரூ.19,200/- | ரூ.2000 x 8 = ரூ. 16,000/-, ரூ.500 x 5 = ரூ. 2,500/-, ரூ.200 x 2 = ரூ.400/-, ரூ.100 x2 = ரூ. 200/-, ரூ.50 x 1 = ரூ.50/-, ரூ.20 x 2 = ரூ.40/-, ரூ.10 x 1 = ரூ.10/-, |

இந்த திடீர் சோதனை 22.10.2020 ஆம் தேதி 2300 மணிக்கு முடிக்கப்பட்டது. அய்யா, மேற்படி புகார் மற்றும் திடீர் சோதனை நடவடிக்கை மீது இன்று 23.10.2020-ந் தேதி 0130 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2020 U/s. 102 (1) Crpc, 7, 7A, 8, 12 of Prevention of Corruption Act 1988 as Amended 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. (Sd) 23/10/2020 திருமதி. இரா.தமிழ்ச்செல்வி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர்.

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு.பெ.கமலகண்ணன், த/பெ. பெரியசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர் என்வரின் புகார், திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும் இதன் நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல்கள் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

23/10/2020

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு
திருவாரூர்.